செ.வெ.எண் 456 நாள் 19-6-2008

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,
சென்னை

நாள் : 19.06.2008

செய்திக் குறிப்பு

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய திருநெல்வேலி விளையாட்டு பள்ளி விடுதி மாணவன் ஜகார்தாவில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் தடகள போட்டியில் தங்கப் பதக்கம்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திருநெல்வேலி விளையாட்டுப் பள்ளி விடுதியில் பயிற்சி பெறும் திரு.எல்.யோகராஜ், தடகள வீரர் பூனாவில் மே மாதம் 22 முதல் 24 வரை நடைபெற்ற 8வது தேசிய தடகள போட்டியில் ஜூனியர் பிரிவில் கலந்து கொண்டு உயரம் தாண்டும் போட்டியில் 2.14 மீட்டர் உயரம் தாண்டி புதிய சாதனை படைத்து தங்கம் வென்றார்.

இதன் மூலம் திரு.எல்.யோகராஜ் ஜூன் மாதம் 12 முதல் 14 வரை ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் தடகள போட்டியில் இந்தியா சார்பில் கலந்து கொண்டு உயரம் தாண்டும் போட்டியில் 2.14 மீட்டர் உயரம் தாண்டி இந்தியத் திருநாட்டிற்கு தங்கம் வென்று பெருமை தேடித் தந்துள்ளார். இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட தடகள அணியினர் (15 ஆண்கள் மற்றும் 11 பெண்கள்) பெற்ற ஒரே ஒரு தங்கப் பதக்கம் உயரம் தாண்டுதல் மூலமாக கிடைத்துள்ளது.

இவர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தி வருகின்ற திரநெல்வேலியிலுள்ள விளையாட்டு விடுதிப் பள்ளியில் கடந்த 4 வருடங்களாக பயிற்சி பெற்று வருகிறார்.

விளையாட்டு விடுதியில் சேர்ந்த போது 1.78 மீ உயரம் தாண்டினார். விளையாட்டு விடுதி பள்ளி பயிற்றுநர் திரு.பிராங்ளின் அவர்களுடைய பயிற்சியின் மூலமாகப் படிப்படியாக உயர்ந்து தற்போது 2.14 மீ உயரம் தாண்டும் வல்லமை பெற்றுள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் உடற்திறனுள்ளவராக இருக்கும் இவர் ஜூலை மாதம் போலந்து நாட்டில் நடைபெற உள்ள உலக ஜூனியர் தடகள சேம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி சார்பாக கலந்து கொள்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரது சாதனைப் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து இந்தியத் திருநாட்டிற்குத் தங்கம் தந்த உயரம் தாண்டும் வீரர் திரு.யோகராஜ் அவர்களை மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள் பாராட்டி வாழ்த்தினார். முனைவர் திரு.இரா.கிறிஸ்து தாச காந்தி, இ.ஆ.ப, அரசு செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அவர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் திருமதி.வி.மேரி ராஜாத்தி அவர்களும் உடன் இருந்தனர்.

1/2

உறுப்பினர் செயலருக்காக.

19.6.08

Senior Personal Assistant to
Minister for Environment
Secretariat, Chennai-600 009

...பீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை